www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் – 8

## (பொது அறிவு)

1. 'அல்மோரா' கோடை வாசஸ்தலம் உள்ள மாநிலம்
அ) இமாச்சலப் பிரதேசம் ஆ) ஜம்மு காஷ்மீர்
இ) ஹரியானா ஈ) உத்தராஞ்சல்

2. தி டாவின்சி கோட் (The Davinci Code) என்ற நூலின் ஆசிரியர்
அ) டான் ப்ரௌன் ஆ) தாமஸ் ஃப்ரெய்ட்மேன்
இ) டேவிட் மெக்குல்லா ஈ) ஆல்ஃபெர் காம்யு

3. ஜார்ஜ் W. புஷ் என்ற பெயரில் W. எதனைக் குறிக்கிறது?
அ) வில்லியம் ஆ) வாக்கர்
இ) விஸ்டம் ஈ) விக்கி

4. '2003 UB313' என்பது
அ) 2003ஆம் ஆண்டு அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்ததன் ரகசியக் குறியீடு
ஆ) 2003ஆம் ஆண்டு அமெரிக்கா தாலிபான்களை ஒழிக்கப் பயன்படுத்திய ரகசியக் குறியீடு
இ) 2003ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட 10ஆவது கோள்
ஈ) அ மற்றும் ஆ இரண்டும்

5. தேசிய மூளை ஆராய்ச்சி நிறுவனம் அமைந்துள்ள இடம்
அ) மானேசர் ஆ) புனே
இ) இம்பால் ஈ) ஹைதராபாத்

6. 'தாமஸ் கோப்பை' எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?
அ) ஹாக்கி ஆ) பாட்மிண்டன்
இ) கால்பந்து ஈ) கிரிக்கெட்

7. 'குருதேவ்' என்ற சிறப்புப் பெயர் கொண்டவர்
அ) பண்டிட் ரவிஷங்கர் ஆ) மகாதேவ் தேசாய்
இ) சுவாமி தயானந்த சரஸ்வதி ஈ) ரவீந்திரநாத் தாகூர்

8. உலக உணவு தினம் (world food day) அனுசரிக்கப்படும் நாள்
அ) அக்டோபர் 8 ஆ) அக்டோபர் 12
இ) அக்டோபர் 16 ஈ) அக்டோபர் 20

9. 'கவி ராட்சஷன்' என்று அழைக்கப்பட்டவர்
அ) ஒட்டக்கூத்தர் ஆ) கம்பர்
இ) உமறுப்புலவர் ஈ) காளமேகப் புலவர்

10. காரைக்காலம்மையாரின் இயற்பெயர்
அ) ராமாயி அம்மையார் ஆ) மணிமேகலையார்
இ) புனிதவதியார் ஈ) கோதை நாயகி

11. மத்திய பண்டகக் காப்பகக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
அ) 1947 ஆ) 1957
இ) 1960 ஈ) 1970

12. வங்கியர் எதை உற்பத்தி செய்பவர் என்று கூறப்படுகிறது?
அ) கடன் ஆ) வைப்பு
இ) மேல்வரைப்பற்று ஈ) பணம்

13. நிகர நாட்டு உற்பத்தி பொதுவாக எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆ) தலா வருமானம்
இ) நாட்டு வருமானம் ஈ) தேய்மானம்

14. கற்சுரங்கத் தொழில் எந்தத் துறையில் இடம் பெறுகிறது?
அ) முதன்மைத் துறை ஆ) இரண்டாம் துறை
இ) மூன்றாம் துறை ஈ) நான்காம் துறை

15. 'மக்கள் திட்டம்' என்று அழைக்கப்பெற்ற திட்டத்தை வரைந்தவர்
அ) பம்பாயைச் சேர்ந்த 8 தொழிலதிபர்கள்
ஆ) அகர்வால்
இ) எம்.என்.ராய்
ஈ) தாதாபாய் நௌரோஜி

16. ஆவடி காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட சம உரிமைச் சமுதாய லட்சியத்திற்கு செயலுரு கொடுக்கும் பொறுப்பு எந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஏற்பட்டது?
அ) முதலாவது ஐந்தாண்டு திட்டம்
ஆ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்
இ) மூன்றாவது ஐந்தாண்டு திட்டம்
ஈ) நான்காவது ஐந்தாண்டு திட்டம்

17. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1979 ஆ) 1985
இ) 1989 ஈ) 1990

18. மொத்தப் பயன்பாடு உச்சநிலையை அடையும்போது இறுதி நிலைப் பயன்பாடு
அ) பூஜ்யமாய் இருக்கும் ஆ) ஒன்றாய் இருக்கும்
இ) மூன்றாய் இருக்கும் ஈ) நான்காய் இருக்கும்.

19. வேலைப் பகுப்பு முறையை அறிமுகப்படுத்தியவர்
அ) ஆதம் ஸ்மித் ஆ) கீன்ஸ்
இ) ஹிக்ஸ் ஈ) ஆல்ஃபிரடு மார்ஷல்

20. பரப்பளவில் மிகப்பெரிய மாநிலம்
அ) உத்தரப்பிரதேசம் ஆ) ராஜஸ்தான்
இ) மத்தியப்பிரதேசம் ஈ) ஆந்திரப்பிரதேசம்

21. 'ஆற்றி இருத்தல்' என்பது எந்தத் திணையின் ஒழுக்கம்?
அ) குறிஞ்சி ஆ) முல்லை
இ) மருதம் ஈ) நெய்தல்

22. 'குடியரசு' என்ற நூலின் ஆசிரியர்
அ) கார்ல் மார்க்ஸ் ஆ) மாண்டெஸ்க்யூ
இ) பிளேட்டோ ஈ) ஜீன் போடின்

23. அமெரிக்க அரசியலமைப்பு
அ) நெகிழும் தன்மை கொண்டது
ஆ) நெகிழாத தன்மை கொண்டது
இ) பாதி நெகிழும் பாதி நெகிழாத தன்மையும் கொண்டது
ஈ) மூன்றும்

24. பாசிசக் கொள்கையின் தீவிர ஆதரவாளர்
அ) முசோலினி ஆ) ஹிட்லர்
இ) கெய்சர் வில்லியம் ஈ) லெனின்

25. அடிப்படை உரிமைகள் எந்த அரசியலமைப்பு விதியில் கூறப்பட்டுள்ளன?
அ) அரசியலமைப்பு விதி 1 முதல் 10 வரை
ஆ) அரசியலமைப்பு விதி 10 முதல் 20 வரை
இ) அரசியலமைப்பு விதி 19 முதல் 32 வரை
ஈ) அரசியலமைப்பு விதி 15 முதல் 32 வரை

26. திப்பு சுல்தானுடன் ஸ்ரீரங்க உடன்படிக்கையைச் செய்துகொண்ட தலைமை ஆளுநர்

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு
ஆ) காரன்வாலிஸ் பிரபு
இ) சர்ஜான் ஷோர் பிரபு
ஈ) வெல்லெஸ்லி பிரபு

27. 'நூர்ஜஹான்' என்பதன் பொருள்
அ) அரண்மனை ஒளி ஆ) தேசத்தின் ஒளி
இ) உலகின் ஒளி ஈ) உலகின் அழகி

28. ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு
அ) 1784 ஆ) 1769
இ) 1771 ஈ) 1773

29. இந்தியப் பெருங்கலகத்தில் பீகாரில் புரட்சியைத் தலைமையேற்று நடத்தியவர்
அ) கன்வார் சிங் ஆ) நானா சாகிப்
இ) தாந்தியா தோபே ஈ) ஜான்சி ராணி

30. ஹைபிஸ்கஸ் கானபினஸ் என்பது எதன் தாவரவியல் பெயர்?
அ) புளிய மரம் ஆ) புளிச்சைக் கீரை
இ) செம்பருத்தி ஈ) வெண்டை

31. உருளைக்கிழங்கு எந்தக் குடும்பத்தைச் சார்ந்தது?
அ) சொலனேஸி ஆ) யூபோர்பியேஸி
இ) மால்வேஸி ஈ) மியூசேஸி

32. தாவரங்களின் இலைக்காம்புகளில் நட்சத்திர வடிவில் காணப்படும் பாரன்கைமா செல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
அ) ஏரன்கைமா ஆ) சேமிப்பு பாரன்கைமா
இ) ஸ்டெல்லேட் பாரன்கைமா ஈ) குளோரென்கைமா

33. பொதுப்படையினர் தேர்வுச் சட்டம் (The General Service Enlistment Act) கொண்டுவரப்பட்ட ஆண்டு
அ) 1856 ஆ) 1857
இ) 1858 ஈ) 1859

34. டிரோசோபில்லாவில் உமிழ்நீர் சுரப்பிகளில் பாலிட்டீன் குரோமோசோம்களை முதன்முதலில் கண்டறிந்தவர்
அ) C.G.பால்பியானி ஆ) ஃபிளமிங்
இ) வால்டேர் ஈ) பிரிட்ஜஸ்

35. ஜீனின் திடீர் மாற்ற அலகு
அ) சிஸ்ட்ரான் ஆ) ரெக்கான்
இ) மியூட்டான் ஈ) மியூரின்

36. தாவர ஒளிச் சேர்க்கையில் கார்பனின் பாதையைக் கண்டறிந்தவர்
அ) கேமன் ஆ) ஹில்
இ) ஹேட்ச் ஈ) கால்வின்

37. நீள்பகல் தாவரத்திற்கு எடுத்துக்காட்டு
அ) புகையிலை ஆ) கோதுமை
இ) சூரியகாந்தி ஈ) மக்காச்சோளம்

38. 'சூரிய ஒளி வைட்டமின்' என்று அழைக்கப்படும் வைட்டமின்
அ) வைட்டமின் A ஆ) வைட்டமின் B
இ) வைட்டமின் C ஈ) வைட்டமின் D

39. 'அல்ஸீமியர் நோய்' என்பது ஒரு
அ) மூளைக் குறைபாடு ஆ) தீவிரப் பக்கவாத நோய்
இ) உறக்க நோய் ஈ) மூளையில் ஏற்படும் ரத்தக் கசிவு

40. 'ஆக்ஸிடோசின்' என்னும் சொல்லின் பொருள்
அ) உயிர் ஹார்மோன் ஆ) உயிர் பிறப்பு
இ) துரிதப் பிறப்பு ஈ) 'அ' மற்றும் 'ஆ'

41. 'பாலிடிப்ஸியா' என்பது
அ) அதிக சிறுநீர் வெளியேறுவது
ஆ) அதிக தாகம் எடுப்பது
இ) அதிக ரத்தம் வெளியேறுவது
ஈ) அதிக மூச்சு இறைத்தல்

42. இன்சுலின் என்பது ஒரு
அ) கார்போஹைட்ரேட் ஆ) கொழுப்பு
இ) ஹார்மோன் ஈ) புரதம்

43. வயது முதிர்ச்சியால் கண்ணின் லென்ஸ் கடினமாவதினாலும் மீள் தன்மை குறைவதினாலும் விழி ஏற்பமைவுத் தன்மையினாலும் ஏற்படும் குறைவு
அ) பிரஸ்பையோபியா ஆ) அஸ்டிக்மேட்டிசம்
இ) இமெட்ரோபியா ஈ) ஏமெட்ரோபியா

44. மிகவும் வயதான நிலையிலுள்ள ரத்தச் சிவப்பணுக்கள் அழிக்கப்படும் இடம்
அ) கல்லீரல் ஆ) எலும்பு மஜ்ஜை
இ) மண்ணீரல் ஈ) நிணநீர் முடிச்சுகள்

45. மரபுப் பொறியியல் பாக்டீரியங்களான 'Super Bugs' என்று அழைக்கப்படும் பாக்டீரியங்களை உருவாக்கியவர் ஒரு
அ) இந்தியர் ஆ) அமெரிக்கர்
இ) பிரிட்டிஷ்காரர் ஈ) சீனர்

46. முடுக்கத்திற்கான பரிமாண வாய்ப்பாடு
அ) $LT^{2}$ ஆ) $LT^{-2}$
இ) $L^{2}$ ஈ) $T^{2}$

47. அணுக்கருத் துகள்களுக்கிடையேயான மோதல் பொதுவாக எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) மோதல்
ஆ) ஒரு பரிமாண மீட்சியற்ற மோதல்
இ) இரு பரிமாண மீட்சியற்ற மோதல்
ஈ) மீட்சி மோதல்

48. நியூட்டனின் முதல் இயக்கவியலில் இருந்து அறியப்படும் கருத்து
அ) நிலைமம் ஆ) வேலை
இ) உந்தம் ஈ) ஆற்றல்

49. வெறும் அயனியாக்கப்பட்ட அணுக்கருக்களால் ஆன பருப்பொருளின் நான்காம் நிலை
அ) வாயு ஆ) நெபுலா
இ) பிளாஸ்மா ஈ) வாயு மற்றும் நீர்மம் கலந்த நிலை

50. கீழ்க்கண்டவற்றில் இது ஓரணு மூலக்கூறு
அ) ஹீலியம் ஆ) ஆக்ஸிஜன்
இ) குளோரின் ஈ) கார்பன்டை ஆக்ஸைடு

51. வானவில் உருவாகக் காரணமான நிகழ்வு
அ) நிறப்பிரிகை
ஆ) ஒளி விலகல்
இ) நிறப்பிரிகையும் ஒளி விலகலும்
ஈ) நிறப்பிரிகையும் முழு அக எதிரொளிப்பும்

52. பிளாங்கின் மாறிலியின் மதிப்பு என்ன?
அ) $6.67 \times 10^{-11}$ Nm2 $kg^{-2}$
ஆ) $6.626 \times 10^{-34}$ JS
இ) 9.8 $ms^{-2}$
ஈ) $1.013 \times 10^{5}$ pa

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

53. காந்தப் பாய அடர்த்தியின் அலகு
அ) வெபர் ஆ) வெபர்/மீட்டர்
இ) டெஸ்லா ஈ) வெபர்/மீட்டர்$^3$

54. பெக்மன் வெப்பநிலைமானியில் மொத்தம் அளவிடும் அளவு
அ) 10 K ஆ) 5 K
இ) 6 K ஈ) 9 K

55. இரு கரைசல்கள் ஒரே வெப்பநிலையில் சமமான சவ்வூடு பரவல் அழுத்தங்களைப் பெற்றிருந்தால் அவை எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
அ) ஹைப்போடானிக் கரைசல் ஆ) ஹைப்பர் டானிக் கரைசல்
இ) ஐசோடோபிக் கரைசல் ஈ) ஐசோடானிக் கரைசல்

56. கிரிக்னார்டு வினை பொருட்களின் வினைத்திறன்
அ) மிக அதிகம் ஆ) மிகக் குறைவு
இ) நடுநிலையானவை ஈ) மந்தமானது

57. DDT என்பதன் விரிவாக்கம்
அ) ட்ரைகுளோரோ டைஃபினைல் டெட்ரா ஈத்தேன்
ஆ) டைகுளோரோ டைஃபினைல் ட்ரைகுளோரோ ஈத்தேன்
இ) டை குளோரோ டை புரோமோ ட்ரை குளோரோ ஈத்தேன்
ஈ) டைஃபினைல் டைகுளோரோ ட்ரை புரோமோ ஈத்தேன்

58. கீழ்க்கண்டவற்றில் ஒன்று டைஃபாய்டு காய்ச்சலைக் குணப்படுத்தும் மருந்து
அ) குளோரோமைசிடின் ஆ) அசிட்டோ தயமிடின்
இ) குளோரோ குயினோன் ஈ) தைராக்சின்

59. நிலக்கரித் தாரில் பென்சீன் இருப்பதைக் கண்டறிந்தவர்
அ) ஃபாரடே ஆ) ஹாப்மன்
இ) பெர்திலாட் ஈ) ஹெக்கல்

60. 'தயாகால்' என்னும் செயற்கை ரப்பர் தயாரிக்கப் பயன்படுவது
அ) மீத்தேன் ஆ) ஈத்தேன்
இ) அசிட்டிலீன் ஈ) எத்திலீன்

61. கரிமச் சேர்மங்களைப் பற்றி விளக்க 'இன்றியமையா விசைக் கொள்கை'யை வெளியிட்டவர்
அ) பெர்சிலியஸ் ஆ) வோலர்
இ) லவாய்சியர் ஈ) கோல்ப்

62. மிகச் சிறந்த மீன்பிடித்தளம்
அ) கண்டச்சரிவு ஆ) பெருங்கடல் அகழி
இ) அகன்ற கண்டத்திட்டு ஈ) பெருங்கடல் குழிகள்

63. மேட்க்லே என்பவரால் கண்டறியப்பட்ட வாயு
அ) ஃபுளூரின் ஆ) கார்பன்
இ) குளோரின் ஈ) குளோரோ புளூரோ கார்பன்

64. மேப் என்ற சொல்லின் மூலப்பொருளான 'மேப்போ' என்ற லத்தீன் மொழிச் சொல்லின் பொருள்
அ) மேசை விரிப்பு ஆ) உலக வரைபடம்
இ) வரைபடம் ஈ) அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய உலக வரைபடம்

65. கடல் நீரில் நீந்தக்கூடிய உயிரிகள்
அ) பிளாங்டன்கள் ஆ) நெக்டான்கள்
இ) ஆல்கே ஈ) பெந்தாஸ்

66. 'தொழிலகங்களை இயக்கும் உயிர்நாடி' எனப்படுவது
அ) போக்குவரத்து ஆ) அரசாங்கம்
இ) எரிசக்தி ஈ) மூலதனம்

67. 'புரட்சிகளின் மூன்றாம் அலை' எனப்படுவது
அ) வேளாண் புரட்சி ஆ) தொழிற்புரட்சி
இ) நீலப்புரட்சி ஈ) தொடர்புப் புரட்சி

68. தேசிய தொலை நுண்ணுணர்வு நிறுவனத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) புதுடெல்லி ஆ) கொல்கத்தா
இ) ஹைதராபாத் ஈ) பனாஜி

69. 'புவியின் வாழ்க்கை ரத்தம் (Life blood of the Earth) என்று அழைக்கப்படுவது எது?
அ) நீர் ஆ) காற்று
இ) ஆக்ஸிஜன் ஈ) பெட்ரோல்

70. டாக்டர் M.S.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள இடம்
அ) மும்பை ஆ) சென்னை
இ) லக்னோ ஈ) டெல்லி

71. MAN என்பதன் விரிவாக்கம்
அ) Metro Area Network
ஆ) Madras Area Network
இ) Mumbai Area Network
ஈ) Metropolitan Area Network

72. Modem என்பதன் விரிவாக்கம்
அ) Modulator demodulator
ஆ) Modulator and demonstrator
இ) Modulation demodulator
ஈ) Modulator and demodulation

73. தென்னிந்திய நல உரிமைக் கழகம் தொடங்கியதில் முதன்மையானவர்
அ) டி.எம்.நாயர் ஆ) சர்.பி.டி. தியாகராய செட்டி
இ) டாக்டர் நடேச முதலியார் ஈ) சி.பி. ராமசாமி ஐயர்

74. மிண்டோ-மார்லி சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு
அ) 1907 ஆ) 1909
இ) 1917 ஈ) 1919

75. 'நியூ இந்தியா' என்ற பத்திரிகையின் ஆசிரியர்
அ) மகாத்மா காந்தி ஆ) பாலகங்காதர திலகர்
இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) டாக்டர் அன்னிபெசன்ட்

76. 10 மீ ஆரமுள்ள ஒரு வட்டத்தை உள்ளடக்கிய ஒரு சதுரத்தின் சுற்றளவு எவ்வளவு?
அ) 400 மீ ஆ) 80 மீ
இ) 120 மீ ஈ) 40 மீ

77. ஒரு பொருளின் 5 நாட்களின் விலை ₹ 180, 230, 170, 195, 225 எனில் அதன் வீச்சு யாது?
அ) 60 ஆ) 230
இ) 170 ஈ) 195

78. ஒருவரது வருமானம் 50% ஆக குறைக்கப்பட்டது. மீண்டும் இந்தக் குறைக்கப்பட்ட வருமானம் 50% அதிகப்படுத்தப்பட்டது. எனில், அவருக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?
அ) 22% ஆ) 23%
இ) 25% ஈ) 27%

79. 10 நபர்கள் சேர்ந்து ஒரு வேலையை 27 நாட்களில் முடிப்பார்கள் எனில், அவ்வேலையை 18 நபர்கள் சேர்ந்து எத்தனை நாட்களில் முடிப்பார்கள்?
அ) 18 நாட்கள் ஆ) 12 நாட்கள்
இ) 21 நாட்கள் ஈ) 15 நாட்கள்

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

80. 2A=3B=4C எனில் A:B:C எவ்வளவு?
அ) 2:3:4 ஆ) 6:4:3
இ) 4:3:2 ஈ) 3:4:6

81. 60 முடிவுகளின் சராசரி 40 மற்றும் 40 முடிவுகளின் சராசரி 60 எனில் எல்லா முடிவுகளின் சராசரி என்ன?
அ) 48 ஆ) 24
இ) 60 ஈ) 100

82. 2x+3y=5 என்ற நேர்க்கோட்டின் சரிவு
அ) $\frac{2}{}$ ஆ) $3/2$
இ) $-3/2$ ஈ) $-2/3$

83. இரு பகடைகள் ஒரே சமயத்தில் வீசப்படும்போது கூடுதல் 7ஐ பெறுவதற்குரிய நிகழ்தகவு யாது?
அ) $7/36$ ஆ) $3/6$
இ) $1/6$ ஈ) $12/36$

84. ஒரு தந்தை, மகன் ஆகியோரின் வயது தற்போது 6:1 என்ற விகிதத்தில் உள்ளன. 5 வருடங்களுக்குப் பிறகு விகிதம் 7:2 எனில் மகனின் தற்போதைய வயது என்ன?
அ) 5 ஆண்டுகள் ஆ) 4 ஆண்டுகள்
இ) 7 ஆண்டுகள் ஈ) 6 ஆண்டுகள்

85. $(\sec\theta+1)(\sec\theta-1)-\tan^2 A$ ன் மதிப்பு
அ) 1 ஆ) -1
இ) 0 ஈ) $1/2$

86. 57ஆவது தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டதில் தமிழின் சிறந்த படமாக தெரிவான படம் எது?
அ) தசாவதாரம் ஆ) ஆயிரத்தில் ஒருவன்
இ) பசங்க ஈ) பேராண்மை

87. சமீபத்தில் நடந்த உலக மல்யுத்தப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர்
அ) சுசீல் குமார் ஆ) விஜேந்தர் சிங்
இ) ஜிதேந்தர் சிங் ஈ) ஜஸ்பால் ராணா

88. சமீபத்தில் ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடிய கோயில்
அ) மதுரை மீனாட்சி அம்மன் கோயில்
ஆ) தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில்
இ) காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயில்
ஈ) திருப்பதி வெங்கடாஜலபதி கோயில்

89. 'டென்னிஸ் போட்டிகள்' எத்தனையாவது காமன்வெல்த் போட்டியில் முதன்முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது?
அ) 17ஆவது ஆ) 18ஆவது
இ) 19ஆவது ஈ) 20ஆவது

90. 'ஆதார்' என்பது
அ) வீடற்ற ஏழைகளுக்கு வீடு வழங்கும் திட்டம்
ஆ) நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கும் திட்டம்
இ) வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் இந்திய மக்களுக்கு மத்திய அரசு உணவு மற்றும் வீடு வழங்கும் திட்டம்
ஈ) இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் மத்திய அரசு வழங்கும் அடையாள அட்டை எண் திட்டம்

91. கீழ்க்கண்டவற்றில் தண்டின் எழுதிய நூல் எது?
அ) காவிய தரிசனம் ஆ) தட்சிண சித்திரம்
இ) பாகவத அஜீக்கியம் ஈ) மத்தவிலாசப் பிரகசனம்

92. அஸ்கார்பிக் அமிலம் என்று எந்த வைட்டமின் அழைக்கப்படுகிறது?
அ) வைட்டமின் B ஆ) வைட்டமின் C
இ) வைட்டமின் D ஈ) வைட்டமின் K

93. அணி சேராமை (Non aligned) என்ற வார்த்தையை உருவாக்கியவர்
அ) வி.கே. கிருஷ்ணமேனன் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் ஈ) பாபு ராஜேந்திர பிரசாத்

94. சேவை வரி இந்தியாவில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1987 ஆ) 1991
இ) 1992 ஈ) 1994

95. 'குன்று தோறாடல்' என்று அழைக்கப்படும் முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்று
அ) திருச்செந்தூர் ஆ) திருப்பரங்குன்றம்
இ) திருத்தணி ஈ) சுவாமிமலை

96. பின்கோடு முறை இந்தியாவில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1967 ஆ) 1970
இ) 1972 ஈ) 1975

97. எத்தனையாவது உலகக்கோப்பை கால்பந்துப் போட்டி சமீபத்தில் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றது?
அ) 17 ஆ) 19
இ) 20 ஈ) 21

98. இந்திய வம்சாவழியைச் சேர்ந்த கமலாபிரசாத் என்பவர், எந்த நாட்டின் முதல் பெண் பிரதமராக சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்?
அ) திரினிடாட் அண்ட் டொபேகோ
ஆ) நியூஸிலாந்து
இ) ஆஸ்திரேலியா
ஈ) ஜெர்மனி

99. FDR என்பது எதைக் குறிக்கிறது?
அ) அந்நிய செலாவணி மோசடி
ஆ) மாவோயிஸ்ட் இயக்கத்தில் ஒரு பிரிவு
இ) வெளிநாடுகளில் இந்தியாவின் முதலீடு
ஈ) விமானத்தில் உள்ள கருப்புப் பெட்டி

100. ஆண்டுதோறும் வழங்கப்படும் நோபல் விருது, அந்த வருடத்தில் முதன் முதலில் எந்தத் துறைக்கு வழங்கப்படுகிறது?
அ) மருத்துவம் ஆ) இயற்பியல்
இ) அமைதி ஈ) இலக்கியம்

## விடைகள் :

1.ஈ), 2.அ), 3.ஆ), 4.இ), 5.அ), 6.ஆ), 7.ஈ), 8.இ), 9.அ), 10.இ), 11.ஆ), 12.ஈ), 13.இ), 14.அ), 15.இ), 16.ஆ), 17.இ), 18.அ), 19.ஈ), 20.ஆ), 21.ஆ), 22.இ), 23.ஆ), 24.அ), 25.இ), 26.ஆ), 27.இ), 28.ஈ), 29.அ), 30.ஆ), 31.அ), 32.இ), 33.அ), 34.அ), 35.இ), 36.ஈ), 37.ஆ), 38.ஈ), 39.அ), 40.இ), 41.ஆ), 42.ஈ), 43.அ), 44.இ), 45.அ), 46.ஆ), 47.ஈ), 48.அ), 49.இ), 50.அ), 51.ஈ), 52.ஆ), 53.இ), 54.இ), 55.ஈ), 56.அ), 57.ஆ), 58.அ), 59.ஆ), 60.ஈ), 61.அ), 62.இ), 63.ஈ), 64.அ), 65.ஆ), 66.இ), 67.ஈ), 68.இ), 69.அ), 70.ஆ), 71.ஈ), 72.அ), 73.இ), 74.ஆ), 75.ஈ), 76.ஆ), 77.அ), 78.இ), 79.ஈ), 80.ஆ), 81.அ), 82.ஈ), 83.இ), 84.அ), 85.இ), 86.இ), 87.அ), 88.ஆ), 89.இ), 90.ஈ), 91.அ), 92.ஆ), 93.அ), 94.ஈ), 95.இ), 96.இ), 97.ஆ), 98.அ), 99.ஈ), 100.அ).

www.LatestWalkin.com